1989 ஏப்ரல் 25]

பழனி வ.உ.சி. பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

98. —(*வினா எண் 305)— திரு. என் பழனிவேல்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலுள்ள வ.உ.சி. பேருந்து நிலையத்தை பைபாஸ் ரோடுவரை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இதற்கு தேவைப்படும் அரசு புறம்போக்கு நிலத்தை குத்தகைக்குப் பெற நகராட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரிலுள்ள அந்த பேருந்து நிலையம் மிகவும் குறுகிய அளவிலே இருக்கின்ற காரணத்தால் அங்கே தினமும் வரக்கூடிய நூற்றுக்கணக்கான பேருந்துகள் உள்ளே வந்து மறுபடியும் வெளியே வருவதற்கு பெரும் சிரமமாக இருக்கிறது. பக்கத்திலே இருக்கக்கூடிய நிலத்தை அரசு குத்தகைக்கு எடுக்க முயற்சிக்கும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது பொதுப்பணித் துறைக்கு பாத்தியப்பட்ட வையாபுரி குளத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிறது. அதை ஏற்கெனவே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பேருந்து நிலையத்திற்காக கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டு இருந்தார்கள். அது தற்போது எடுக்கப்பட்டு விட்டதா? இல்லை அது இன்னமும் ஆய்வில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் வரக்கூடிய முக்கியமான நகரம் பழனி. தைப்பூசம், பங்குனி உத்திரம் திருவிழாக் காலங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகின்றார்கள். ஏற்கெனவே அங்கே இருக்கக்கூடிய பஸ் நிலையத்திற்கு தினமும்

350 பேருந்துகள் வந்து செல்கின்ற குறிப்புகள் தரப் பட்டிருக்கின்றன. 35 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பஸ் நிலையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. அந்த இடம் போதாது, இன்னும் விரிவு படுத்த வேண்டுமென்றுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அந்தக் குளத்தை, புறம்போக்கு இடத்தை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. அவர்களும் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டார்கள். இப்போது நில நிர்வாக ஆய்வாளரின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த இடம் சம்பந்தமாக நில நிர்வாக அதிகாரிகளின் பரிசீலனையில் இருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, இன்றைக்கு 350 பஸ்கள் தினமும் வருவது மட்டுமல்ல மேற்கொண்டு டவுன் பஸ்கள் வேறு அதே பஸ் நிலையத்திற்குள் தினமும் நூற்றுக்கணக்கிலே வந்து செல்கின்றன. ஆகவே அவசர உணர்வோடு அந்த பஸ் நிலையத்தை உடனடியாக மேற்கே இருக்கக்கூடிய அந்த பை-பாஸ் ரோட்டை நீட்டித்து கொடுப்பதோடு, இன்றைக்கு அந்தப் பேருந்து நிலையம் வருடத்திற்கு 3 தடவை வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது. தற்காலிகமாக குத்தகை விட்டு, அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவு ஏற்படுகிறது. அதையும் நாம் தவிர்க்கக் கூடிய முறையில் உடனடியாக இந்த வேலையை எடுத்து முடிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல தைப் பூசம், பங்குனி உத்திரம் திருவிழாக் காலங்களிலே 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வரக் கூடிய காலகட்டத்தில் நெருக்கடியைத் தவிர்க்க அங்கே இருக்கக்கூடிய நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்குக் கூட இந்த இடம் மாற்றப்படுகிறது. மாற்றப்பட்டு, பொதுமக்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இருந்தாலும் நிரந்தரமாக அங்கே ஒரு முடிவு காணவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரிவாக நில நிர்வாக ஆணையாளருடன் கலந்துபேசி, தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS